(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வழக்கில் சொல்லப்பட்டுள்ள சொத்தானது என் தகப்பனார் ஆறுமுக நாடாருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். என் அப்பாவிற்கு 5 ஆண் மக்களும், ஒரு பெண் மகளும் வாரிசுகள் என்றால் சரிதான். என் அண்ணன் மூத்தவர்பெயர் மாடசாமி என்றால் சரிதான். மாடசாமியின் மனைவி மக்கள் தான் இந்த வழக்கின் பிரதிவாதிகள் என்றால் சரிதான். கடைசி பிரதிவாதி என் சகோதரி என்றால் சரிதான். என் குடும்ப சொத்துக்கள் அனைத்தையும் இரண்டு பாக பிரிவினை ஆவணம் மூலம் பிரித்து கொண்டோம் என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து மேற்படி இரண்டு பாக ஆவணத்தில் இடம் பெறவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சொத்து மேற்படி என் அண்ணன் மாடசாமியின் பாகத்திற்கு கிடைத்து என்பதால் தான் அது பாக ஆவணத்தில் காண்பிக்கப்படவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு என் அண்ணன் பெயரில் தான் பட்டா உள்ளது என்றால் இல்லை. என் அப்பா பெயரில் தான் உள்ளது. அந்த பட்டாவை தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். என் அண்ணன் மாடசாமி உயிருடன் இருந்த போது வழக்கு சொத்தைபொறுத்து அவரது ஆண் மக்கள் 3 பேருக்கும் ஏற்பாடு ஆவணம் எழுதிக்கொடுத்திருந்தார் என்றால் சரிதான். அது மோசடியான ஆவணம் அதை ரத்து செய்ய வேண்டும் என காவல்நிலையத்தில் புகார் செய்தேன் என்றால் சரிதான். காவல்நிலையத்தில் விசாரணை நடைபெற்று அதன் அடிப்படையில் மேற்படி ஏற்பாடு ஆவணம் ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். என் அண்ணன் மாடசாமியின் குமாரர்கள் 3 பேரும் சேர்ந்து மேற்படி ரத்து ஆவணம் செல்லாது என வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் சரிதான். அதில் அவர்கள் கோரியபடி தீர்ப்பளிக்கப்பட்டது என்றால் சரிதான். நான் அதில் தரப்பினர் அல்ல. அந்த வழக்கு நடந்த விபரம் தெரியுமா என்றால் தீர்ப்பு வந்த பிறகு தான் தெரியும். இந்த

வழக்கில் அந்த வழக்கின் தீர்ப்பு செல்லாது என தீர்வு எதுவும் கேட்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை என் அண்ணன் மக்கள் தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. வயிலில் தற்போது கர்நாடாக பொம்மி நெல்பயிர் செய்யப்பட்டுள்ளது. மேற்படி நெல் பயிரை என் அண்ணன் மாடசாமியின் குமாரர்கள் தான் நடவு செய்துள்ளார்கள் என்றால் சரிதான். எல்லோருக்காகவும் சேர்த்து நடவு செய்யப்பட்டுள்ளது.அண்ணன் மாடசாமியின் குமாரர்கள் தான் தண்ணீர் பாய்ச்சி நெல்பயிரை பேணி பராமரித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. எல்லோரும் சேர்ந்து செய்து வருகிறோம். மேற்படி நெல் பயிர் சாகுபடி தொடர்பாக வரவு கணக்கு செலவு என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. சொத்தை வழக்கின் கடைசி பிரதிவாதி தவிர மற்ற பிரதிவாதிகள் தான் தொடர்ந்து அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. அனைவரும் சேர்ந்து அனுபவித்து வருகிறோம். வழக்கு சொத்தில் எனக்கு எந்த ஒரு பங்கு பாகமும் கிடைக்கதக்கது அல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்து முழுவதும் என் அண்ணன் மாடசாமியின் குமாரர்கள் தான் தனித்து பாத்தியப்பட்டு அவர்கள் அனுபவம் செய்து வருவதால் அவர்களுக்கு தான் தனித்து பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. என் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்றால் சரியல்ல.